தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 04 Jan 2011 12:10:16 PM IST

வத்தலகுண்டு, ஜன. 3:வத்தலக்குண்டு அருகே உள்ள ஜி.கல்லுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் தும்மலப்பட்டியில் மரக்கன்றுகள் நடும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, ஜி.தும்மலப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சிவலிங்கம் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் மொக்கத்துரை, துணைத் தலைவர் மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வத்தலக்குண்டு சரக வனக்குழுத் தலைவர் கருப்பணகவுண்டர் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முருகேசன், துணை அலுவலர்கள் முருகேசன், துணை அலுவலர் கோபி, ஊராட்சி உதவியாளர் செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இப்பகுயில் 1,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. மக்கள் நலப் பணியாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

**விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்'**

First Published : 04 Jan 2011 12:58:36 PM IST

திருவாரூர், ஜன. 3: தோட்டக்கலைப் பயிர்கள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார் பால்வளத் துறை அமைச்சர் உ. மதிவாணன்.

திருவாரூர் மாவட்டத் தோட்டக்கலைத் துறை சார்பில் ஊராட்சித் தலைவர்களுக்கான திட்ட விளக்கம் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் திருவாரூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

முகாமைத் தொடக்கிவைத்து அமைச்சர் மேலும் பேசியது:

தோட்டக்கலைப் பயிர்கள் மூலம் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. எனவே, இதுகுறித்த விழிப்புணர்வை கிராமப்புற விவசாயிகளிடம் ஊராட்சித் தலைவர்கள் ஏற்படுத்த வேண்டும். ஊராட்சித் தலைவர்கள் மக்களுக்கு சேவை செய்வதைக் கடமையாகக் கொண்டு செயலாற்ற வேண்டும்.

அரசின் திட்டங்களை அடித்தட்டு மக்களுக்கும் கொண்டு செல்லும் பணியை ஊராட்சித் தலைவர்கள் ஏற்றுச் செயலாற்ற வேண்டும்.

தோட்டக்கலைப் பயிர்களை விவசாயிகள் பயிரிடுவதை ஊக்கப்படுத்தும் வகையில், மானிய உதவிகளை அரசு அளித்து வருகிறது.

முன்பு ஊராட்சி மன்றங்கள் போதிய நிதி ஆதாரமின்றி இருந்தன. தற்போது அரசு ஏராளமான நிதிகளை ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கி வருகிறது. இதன்மூலம், மக்கள் நலப் பணிகளை முறையாக நிறைவேற்ற வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம், உயர் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுத் திட்டம், நுண்ணீர் பாசனம், தேசிய மூங்கில் இயக்கம், தேசிய மூலிகை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதற்கு மானிய உதவிகளும் வழங்கப்படுகின்றன. இவற்றை ஊராட்சித் தலைவர்கள் தங்களது ஊராட்சியைச் சேர்ந்த விவசாயிகளிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றார் அமைச்சர்.

விழாவுக்குத் தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் பேசியது:

தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடுவதில் குறுகிய காலத்தில் அதிக லாபம் கிடைக்கிறது. இதற்கு மானிய உதவிகளும் வழங்கப்படுகின்றன. திருவாரூர் மாவட்டத்தில் 90 சதம் நெல் சாகுபடிதான் மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகள் தங்களது நிலத்தில் ஒரு பகுதியில் தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட முன்வர வேண்டும்.

ஊராட்சித் தலைவர்கள் தங்களது ஊராட்சிகளில் விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றம் செய்ய அனுமதி வழங்கும் போது, அதை கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

விழாவில் இந்திய பருத்தி மேம்பாட்டு வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினர் பூண்டி. கே. கலைவாணன், நகர்மன்ற துணைத் தலைவர் ஆர். சங்கர், நகர்மன்ற உறுப்பினர் ஜெ. அய்யனார் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் க. இளங்கோவன் வரவேற்றார். உதவி இயக்குநர் ஆர். கலியராஜ் நன்றி கூறினார்.

**சாகுபடி பணிக்குக் காத்திருக்கும் கீழ்பவானி பாசன விவசாயிகள்**

First Published : 04 Jan 2011 10:58:13 AM IST

ஈரோடு, ஜன. 3: கீழ் பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் தேதி அறிவிக்கப்படாததால், விவசாயிகள் சாகுபடிப் பணிகளை தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பவானிசாகர் அணையில் இருந்து ஆண்டுதோறும் கீழ்பவானி பாசன வாய்க்காலில் ஆகஸ்ட் 16 முதல் டிசம்பர் 15-ம் தேதி வரை நன்செய் பாசனத்துக்கும், ஜனவரி 5-ம் தேதி முதல் ஏப்ரல் 30-ம் தேதி வரை புன்செய் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்படும்.

இதன் மூலம் இந்தப் பாசனப் பகுதியில் 1 லட்சத்து 3,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

கடந்த டிசம்பர் 15-ம் தேதி வரை நன்செய் பாசனத்துக்கு தண்ணீர் விடப்பட்ட நிலையில், கூடுதலாக மேலும் 15 நாள்களுக்கு நீர் விநியோகம் செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 30-ம் தேதி வரை கூடுதலாக 15 நாள்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

நிலக்கடலை, எள் உள்ளிட்ட மானாவாரிப் பயிர்களை சாகுபடி செய்ய, நிலத்தை தயார் செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

முறை வைத்து தண்ணீர் திறப்பு செய்யப்படும் என்பதால், தண்ணீர் திறக்கப்பட்டவுடன் நடவுப் பணிகளைத் தொடங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்களை வாங்கி, தயார்நிலையில் வைக்க உதவும் வகையில், தண்ணீர் திறப்பு தேதியை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

### 730 ஏக்கரில் நெற் பயிர் பாதிப்பு: விவசாயிகள் புகார்

First Published : 04 Jan 2011 12:39:40 PM IST

சிவகங்கை, ஜன. 3: வேப்பங்குளம், கடியமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் 730 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்து நெற் பயிர்கள் நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது வேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், சந்தனேந்தல், பேர்வளசி, கல்குளம், அச்சணி, தெம்மாவயல், அரிகுறிச்சி, பாச்சட்டி, நாரணமங்கலம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் காய்ந்த நெற் பயிர்களுடன் வந்தனர்.

அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலரைச் சந்தித்து தங்கள் பகுதியில் 730 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் டீலக்ஸ் பொன்னி நெல் பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் சமீபத்தில் பெய்த மழையால் புகையான், குலைநோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. எந்த மருந்து அடித்தும் நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட எங்களுக்கு அரசு மூலம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து மனு அளித்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர், வேளாண்மைத் துறை அதிகாரி தட்சிணாமூர்த்தியை அழைத்து விவசாயிகளின் மனுக்களை பரிசீலித்து அவர்களின் வயல்களை ஆய்வு செய்து நிவாரணம் கிடைக்க வகை செய்யுமாறு உத்தரவிட்டார்.

**மக்காச்சோளத்துக்கு குறைந்தபட்ச விலையாக ரூ. 1000 வழங்க வலியுறுத்தல்**

First Published : 04 Jan 2011 01:14:16 PM IST

பெரம்பலூர், ஜன. 3: வேளாண்மை விற்பனைத் துறையினர் அறிவித்தபடி, மக்காச்சோளத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ. 1000 வழங்க, மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, விவசாயச் சங்கத்தினர் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமாரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தலைமையிலான விவசாயிகள் அளித்த மனு விவரம்:

பெரம்பலூர் மாவட்டத்தில் 900 ஏக்கர் நிலப் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அண்மையில் பெய்த தொடர் மழையால் மக்காச்சோளம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது விவசாயிகளிடமிருந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 850 மட்டுமே வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

இதனால், சாகுபடி செய்த செலவுகூட கிடைக்காமல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதேபோல பல ஆண்டுகளாக அறுவடை காலங்களில் குறைந்த விலைக்கு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது.

இதனிடையே, மக்காச்சோள வியாபாரிகள் கொள்முதல் செய்யும்போது, எடைக்கல், கோனிப்பைகள் மூலமாக மோசடி செய்து விவசாயிகளை ஏமாற்றுகின்றனர்.

எனவே, விவசாயிகள் பாதிக்காத வகையில், மக்காச்சோள வியாபாரிகளுடன் மாவட்ட நிர்வாகம் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

கோனிப்பையில் மக்காச்சோளம் நிரப்பியவுடன் மட்டுமே லாரியில் ஏற்ற அனுமதிக்க வேண்டும்.

மேலும், வேளாண் அலுவலர்கள் திடீர் சோதனையில் ஈடுபட்டு, மோசடியில் ஈடுபடும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயச் சங்கத்தினர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளனர்.

**கும்பகோணம் வட்ட நெல், அரிசி வியாபாரிகள் சங்கக் கூட்டம்**

First Published : 04 Jan 2011 01:02:02 PM IST

கும்பகோணம், ஜன. 3: கும்பகோணம் வட்ட நெல், அரிசி வியாபாரிகள் சங்கப் பொதுக் குழுக் கூட்டம், புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா ஆகியன ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

கூட்டத்துக்கு தஞ்சை மாவட்ட நெல், அரிசி வியாபாரிகள் சங்க மாவட்டச் செயலர் கே.எஸ். சேகர் தலைமை வகித்தார். சங்கத்தின் கும்பகோணம் வட்ட துணைச் செயலர்கள் முனியப்பன், சின்னப்பா, பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதிய நிர்வாகிகளாக- கெப்ரவத் தலைவராக செல்வராஜ், தலைவராக பி. குருநாதன், பொதுச் செயலராக ஜாஹிர் உசேன், பொருளாளராக பாலகிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகளுக்கு விரைவாக வெள்ள நிவாரணம்**

First Published : 04 Jan 2011 01:44:40 PM IST

திருவண்ணாமலை, ஜன. 3: மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனே வெள்ள நிவாரணம் தர வேண்டும் என பாட்டாளி இளைஞர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட பாமக இளைஞர் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் போளூரில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

2011-ம் பேரவைத் தேர்தலில் பாமக வெற்றி பெற இளைஞர் சங்கங்கள் தீவிரமாக பாடுபட வேண்டும், அதிகளவில் பாமகவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும். இளைஞர் சங்க 10 கட்டளையை துண்டு பிரசுரங்கள் மூலம் இளைஞர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை அரசு உடனே சீரமைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் தர வேண்டும்.

மாவட்ட இளைஞர் சங்கச் செயலர் கா.ஏழுமலை தலைமை தாங்கினார். துணைச் செயலர் ராஜ்குமார், மணிகண்டன் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞர் சங்கச் செயலர் துரைராஜ் வரவேற்றார். மாநில இளைஞர் சங்கச் செயலாளர் வே.செந்தில், மாவட்டச் செயலர் கி.ஏழுமலை, மாவட்ட உழவர் பேரவை செயலாளர் லோ.மார்க்கண்டன், சட்டப் பாதுகாப்பு குழுத் துணைத் தலைவர் ஆ.பாலமூர்த்தி சிறப்புரை ஆற்றினர்.

முல்லைப் பெரியாறு அணையில் மத்திய தொழில்நுட்ப நிபுணர் குழு இன்று ஆய்வு

First Published : 05 Jan 2011 01:31:37 AM IST



தேனி, ஜன. 4:முல்லைப் பெரியாறு அணையில் உச்ச நீதிமன்ற உயர்நிலைக் குழுவின் சார்பில் மத்திய தொழில்நுட்ப நிபுணர் குழுவினர் ஜனவரி 5-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ஆய்வு நடத்த உள்ளனர்.

÷பெரியாறு அணையின் பலம் குறித்தும், அணையில் நீர் தேக்கும் அளவை உயர்த்துவது குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, 5 பேர் அடங்கிய உயர்நிலைக் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது.


÷இதையடுத்து உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையிலான உயர்நிலைக் குழுவினர், 2010 டிசம்பர் 21-ம் தேதி பெரியாறு அணையில் ஆய்வு நடத்தினர். இதைத் தொடர்ந்து மத்திய மண் வள ஆராய்ச்சி நிலையம், மத்திய நீர் மற்றும் மின்சாரம் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த 5 பேர் அடங்கிய நிபுணர் குழுவினர் பெரியாறு அணையில் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ஆய்வு நடத்த உள்ளனர். இக்குழுவுக்கு மத்திய மண் வள ஆராய்ச்சி நிலைய இணை இயக்குநர் ராஜ்பால்சிங் தலைமை வகிக்கிறார்.

÷இக்குழுவினர் அணைப் பகுதியில் நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி தண்ணீர் அலைவீச்சின் வேகம், அதிர்வு ஆகியவற்றைப் பதிவு செய்து, ஆய்வு நடத்த உள்ளனர் என தமிழக பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

தினமலர்

# பெருலாபம் தரும் பிரண்டை வளர்ப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,00:00 IST




பிரண்டையில் கால்சியம் (ஆக்சலேட் வடிவில்; 100 கிராம் தண்டில் 267 மி.கிராம் என்ற அளவில்), கரோட்டீன், "சி' ஊட்டச்சத்து (அஸ்கார்பிக் ஆசிட் வடிவில்; 100 கிராம் தண்டில் 398 மி.கிராம் என்ற அளவில்), நார்ச்சத்து, அமினோ அமிலங்கள் உள்ளன. ஆண்மைக்குறைவு, தாது நஷ்டம், சூதக வலி, ஒழுங்கற்ற மாதவிடாய் கோளாறுகள், சோம்பல், பசியின்மை, ருசியின்மை, எலும்பு முறிவு, வாய்ப்புண், வாய்நாற்றம், அல்சர், மூலம், பொலிவற்ற சருமம், ஆஸ்துமா, நீரிழிவு, கண்பார்வை கோளாறு, கண் எரிச்சல், உடல் பருமன் போன்றவற்றிற்கு நிவாரணம் தரும் அருமருந்தாக பிரண்டை திகழ்கிறது. மூலிகை சாகுபடி செய்வோரை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. பல்வேறு வியாபார பெயர்களில் விற்பனைக்கு வரும் இயற்கை மருத்துவ தயாரிப்புகளில் பிரண்டை முக்கிய பங்கு வகிக்கிறது.

இத்தயாரிப்புகளில் பிரண்டை தண்டோ, இலையோ, சாறோ நேரடியாக சேர்க்காமல் பிரண்டை உப்பும், பிரண்டை பஸ்பமும் பயன்படுத்தப்படுகிறது. பிரண்டை உட்பட ஏறக்குறைய எல்லா மூலிகைகளிலும் தாவரத்தின் வேர், தண்டு, இலை, பூ, காய் என அனைத்து பகுதிகளும் பல வகைகளில் பயன்படுகின்றன. உயரிய லாபவிகிதம் கொண்ட பிரண்டையை ஒருமுறை சாகுபடி செய்து காபி, தேயிலை பயிர்களைப் போன்று பலமுறை அறுவடை செய்யலாம்.
வறட்சியை தாங்குவதில் மன்னன். சாகுபடி நுட்பங்களும் மிக எளிதானதாகும். இதனை ஆடு, மாடுகள் அண்டாது என்பதால் வேலி அமைப்பதற்கு பெருந்தொகை செலவு செய்ய வேண்டியதில்லை. அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்போர் மொட்டை மாடியில் தொட்டியில் இதனை சாகுபடி செய்யலாம். வாரக்கணக்கில் தண்ணீர் ஊற்றாவிட்டாலும் சாகாது. திரும்பவும் நீர் ஊற்றியதும் உயிர்த்தெழும். சிரஞ்சீவியாய் நின்று பலன் தரும்.
பிரண்டையிலிருந்து மருந்துப் பொருட்கள் மட்டுமின்றி ஊறுகாய், ஜாம், ஜெல்லி ஆகிய தின்பண்டங்களையும் தயாரித்து சந்தைப் படுத்தலாம். தங்கள் வீட்டிலும் ஒரு பிரண்டை கொடி வளர்க்க ஆர்வம் கொண்டவர்கள் "டி.கே.சிவராஜ், விஞ்ஞானி, ஆராய்ச்சித்திட்ட வளாகம், எஸ்.கே.புரம்-627 602, பாப்பாக்குடி அஞ்சல், திருநெல்வேலி' என்ற முகவரிக்கு விண்ணப்பித்து பிரண்டை கன்றினை இலவசமாக பெறலாம். கமகமன்னு குழம்பு வெச்சிராதீங்க! நடுங்க... திராட்சை கொடிபோல் அழகா படரும்.

**நாஞ்சில் நாட்டு பிரண்டை குழம்பு**

தேவையான பொருட்கள்: இளம் பிரண்டை தண்டு-250 கிராம், சுத்தம் செய்த புளி-100 கிராம், மிளகாய்தூள்-15 கிராம், இஞ்சி-15 கிராம், மிளகுதூள்-25 கிராம், முற்றிய தேங்காய்பால்-1 கப், சின்னவெங்காயம்-125 கிராம், தக்காளி-100 கிராம், மஞ்சள் தூள்-1 தேக்கரண்டி, சீரகதூள்-1 தேக்கரண்டி, கடுகு-1 தேக்கரண்டி, வெந்தயம்-1 தேக்கரண்டி, தேங்காய் எண்ணெய்-4 தேக்கரண்டி (தாளிக்க), உப்பு - தண்ணீர் - தேவைக்கு.

**செய்முறை:** நன்றாக மிக்சியில் அடித்த பிரண்டை தண்டை புளி கரைத்த தண்ணீரில் ஒரு மணி நேரம் ஊறவைக்கவும். இத்துடன் சீரகபொடி, மஞ்சள்பொடி, மிளகாய்பொடி, மிளகுபொடி, மிக்சியில் அடித்த வெள்ளை பூண்டு, இஞ்சி ஆகியவற்றை சேர்த்து கலக்கி, தேவைக்கு தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கவும். சின்ன வெங்காயத்தை தேங்காய் எண்ணெயில் வதக்கி போடவும். தேங்காய்பாலை ஊற்றி கலக்கி கொதிக்க விடவும். தேங்காய் எண்ணெயில் கடுகு, வெந்தயம் போட்டு தாளிக்கவும். வட்ட துண்டுகளாக வெட்டிய தக்காளியை போட்டு இறக்கவும். எந்த உணவையும் அதிக சூட்டிலோ, அதிக குளிரிலோ சாப்பிட்டால் அதன் சுவை தெரியாது. எனவே மூடி வைத்து ஒரு மணிநேரம் கழித்து பரிமாறவும். சுடுசோற்றுக்கு ஏற்ற வலுவான சைட் டிஷ் இது. இட்லி, தோசை, சப்பாத்தி, பிரட் சாண்ட்விச் ஆகியவற்றுடன் சேர்த்து சாப்பிட அமர்க்களமாக

இருக்கும். உடம்புக்கு வலுவும் வனப்பும் தரும் காரணிகள் அடங்கியது. வளரும் குழந்தைகளுக்கு ஏற்றது.டி.கே.சிவராஜ், விஞ்ஞானி, பாப்பாக்குடி, திருநெல்வேலி-627 607.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,00:00 IST

மனீஷா-96 வீரிய ஒட்டு சோளம்: வயது 100 முதல் 105 நாட்கள். உயரம் 180 செ.மீ. வரை வளரக் கூடியது. சாயும் தன்மை அற்றது. வறட்சியைத் தாங்கும் தன்மையுடையது. முத்துப்போன்ற வெண்ணிறமுள்ள பருமனான மணிகள், கால்நடை தீவனத்திற்கேற்ற தரமான முக்கிய தட்டைகள், பெரிய உறுதியான கதிர்கள், நெருக்கமான பெரிய மணிகள், மகசூல் ஏக்கருக்கு 32-35 குவின்டால். **மேலும் விபரங்களுக்கு: மனீஷா அக்ரி பயோடெக் (பி) லிட்., ஐதராபாத்-500 029. 93441 07630.**

**பூம் பிளவர் அல்ட்ரா:** தேவி கிராப் சயின்ஸ் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் கண்டறியப்பட்ட அதிநவீன, தனித்துவம் வாய்ந்த 22 சதம் அரோமேட்டிக் நைட்ரஜன் மூலப்பொருளைக் கொண்டது. இது உலகம் முழுவதும் உள்ள விவசாயிகளால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நெல் பயிரில் பயன்படுத்தும்போது வலுவான வேர்கள், அதிக சிம்புகள், நீண்ட கதிர்கள், தரமான நெல்மணிகள், உயர்ந்த மகசூல் பெற சிபாரிசு செய்யப்படுகிறது. தொடர்புக்கு: **""தேவி கிராப் சயின்ஸ் பிரைவேட் லிமிடெட், மண்டல அலுவலகம், N.193, வணிக வளாகம், மாட்டுத்தாவணி, மதுரை-625 007. போன்: 0452-258 2211."**

உயிர் உரங்கள் இடுவதன் மூலம் - தழைச்சத்து நிலைப்படுத்தப்படுகிறது. மணிச்சத்து, சாம்பல்சத்து கரைத்து தரப்படுகிறது. சிலிகேட் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் கிடைக்கின்றன. பயிரின் வளர்ச்சியும் வேரின் வளர்ச்சியும் கூடுகிறது. வளர்ச்சி ஊக்கிகள் வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றன. ரசாயன உர உபயோகம் குறைந்து சுற்றுச்சூழல் மேம்படுகிறது. மகசூல் கூடுகிறது மற்றும் மண்வளம் காக்கப்படுகிறது.

பயறுவகைகள் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேளாண்மை உத்திகள்: பாசன வசதியுள்ள பகுதிகளில் துவரை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறுவகைகளை தனிப்பயிராக பயிரிடுதல். சரியான பட்டத்தில் காலத்திற்கேற்ற உயர் விளைச்சல் ரகத்தை தேர்வு செய்தல். செடிகளுக்கிடையே சரியான இடைவெளியைப் பராமரித்தல். ஒருங்கிணைந்த களை நிர்வாகம்,

உர நிர்வாகம், பூச்சி மற்றும் நோய் நிர்வாகம். 2 சத டி.ஏ.பி. உரத்தையும், பிளானோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கியையும் பூக்கும் பருவத்திலும், 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை இலை வழியாக அளித்தல். நல்ல சேமிப்பு கிடங்குகளில் விதைகளைப் பராமரித்து முளைப்புத் திறன் மற்றும் பூச்சிகளின் தாக்குதலில்இருந்து பாதுகாத்தல். பயறுகள் ஊட்டச்சத்தினை ஒரு ஏக்கருக்கு 2.5 கிலோ அளவில் 250 லிட்டர் தண்ணீரில் கரைத்து பயிர்கள் பூக்கும் காலத்தில் காலை நேரத்தில் இலைவழி தெளித்தல். உற்பத்தியாளர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ மேம்படுத்தப் பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பருப்பு உடைக்கும் கருவியை வாங்கி பயன்படுத்தி, துவரை, உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றை பருப்பாக உடைத்து சுத்தம் செய்து, தரம் பிரித்து அதிக வருமானத்தைப் பெறலாம். பாசன வசதியுள்ள இடங்களில் துவரையை நாற்றுவிட்டு உரவழி நீர்பாசனம் செய்வதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம். பயறுவகைப் பயிர்களை வறட்சி ஏற்படுகின்றபோது மொபைல் ஸ்பிரிங்க்ளரைப் பயன்படுத்தி வறட்சியிலிருந்து பாதுகாத்து அதிக மகசூலைப் பெறலாம். (தகவல்: துணைவேந்தர், த.வே.பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003). -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**நெல் சாகுபடியில் அடுத்தது என்ன?**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,00:00 IST



**தினமலர் மதுரை பதிப்பு டிசம்பர் 1ம் தேதி "விவசாய மலரில்' நெல் சாகுபடி பற்றிய பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.** தக்க சமயத்தில் அதாவது நெல் சாகுபடி துவங்கும் சமயத்தில் வெளிவந்த இக்கட்டுரைகள் விவசாயிகளுக்கு பெரும் பயன் தந்துள்ளதாகவும் விவசாயிகள் கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்துள்ளனர். பெரியார், வைகை பாசன திட்டத்தின்கீழ்

மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் நெற்பயிர் வளர்ச்சி மிகவும் நன்றாக உள்ளது. இருப்பினும் நெல்பயிரினை பூச்சி, பூஞ்சாளங்கள் பாதிப்பதற்கு வாய்ப்பு உண்டா? தற்போது செழிப்பாக வளர்ந்துள்ள பயிர் நல்ல மகசூல் கொடுக்குமா அல்லது கானல் நீர் காட்சி மாதிரியாக போய்விடுமா என்ற பயம் உள்ளது. ஆதலின் நெல் சாகுபடியில் அடுத்தது என்ன செய்யவேண்டும்என்று தெரிந்துகொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். விவசாயிகள் உடனே தங்கள் கதிர் பருவத்தில் உள்ளதா என்பதை முதலில் கவனிக்க வேண்டும். இது சமயம் காலை நேரத்தில் கதிர் நாவாய் பூச்சி நடமாட்டம் இருக்கும். இதன் உடல் பழுப்பு நிறத்தில் சுமார் 2 செ.மீ. நீளம் கொண்டதாக இருக்கும். பூச்சியினை கையால் தொட்டால் துர்நாற்றம் வீசும். இதனைக் கட்டுப்படுத்த லிண்டேன் 1.3 சதத்தூள் அல்லது மாலத்தியான் ஐந்து சத தூளினை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் அதிகாலை நேரத்தில் பனிப்பதத்தில் தூவ வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால் மானோகுரோட்டோபாஸ் அல்லது மாலத்தியான் திரவ மருந்தினை ஏக்கருக்கு 200 மில்லி வீதம் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். அடுத்ததாக பயிரில் வெண்கதிர்கள் திடீரென்று தோன்றினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நெற்பயிரின் கழுத்துப் பாகத்தினை கவனிக்க வேண்டும். அப்போது குலைநோய் தாக்கியுள்ளதா என்பதை கண்டுகொள்ளலாம். கதிரின் கழுத்து பாகம் பழுப்புநிறம் அடைந்து வெண்சாவியாகியும் காணப்பட்டால் இது குலைநோய் என்பது தெரிந்துவிடும். தற்போது குளிர்காலம். தேவையில்லாத சமயம் தழைச்சத்து உரம் (யூரியா) இட்டால் கதிர் குலைநோய் கடுமையாக தாக்கும். நோயின் தீவிரம் அதிகம் ஆகும்போது பயிர் முழுவதும் தாக்கப்பட்டு தீயினால் கருகியதை போன்ற தோற்றத்தை அளிக்கும். பயிர் பாதுகாப்பு துவங்கும் முன் வயலில் உள்ள நீரினை வடித்து விட்டு கீழ்க்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை உபயோகிக்கலாம். விசைத் தெளிப்பான் உபயோகித்தால் ஒரு டேங்க் தண்ணீரில் 50 மில்லி ஹீனோசான் கலந்து அடிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 300 மில்லி அடிக்கலாம். ஹீனோசான் கிடைக்காவிடில் பவிஸ்டின் + காலிக்சின் அடிக்கலாம். ஒரு டாங்க் தண்ணீரில் 33 கிராம் பவிஸ்டின் மற்றும் 17 மில்லி காலிக்சின் கலந்து அடிக்கலாம். தற்போது பயிர்களில் தோன்றும் வியாதிகளை பாக்டீரியாக்களின் உதவியோடு அழிக்கலாம். இதன் அறிவியல் பெயர் சூடோமோனாஸ் (பி.எப்1). இந்த மருந்தினை 400 கிராம் அளவினை 200 லிட்டர் நீரில் கலந்து கரைசலை ஒரு ஏக்கர் பயிர் மேல் தெளிக்கலாம். அடுத்து விவசாயிகள் பூச்சிகள் தாக்குவதை தவிர்க்க வேண்டும். பயிர் மேல் நிழல் விழாமல் கவனித்தால் இலை சுருட்டுப் புழுவை மருந்து அடிக்காமல் காப்பாற்றலாம். நீர் பாசனத்தில் பாய்ச்சலும் காய்ச்சலும் என்ற ரீதியில் நிர்வகித்தால் புகையான் பூச்சி தாக்குததலை தவிர்க்கலாம். இலை சுருட்டுப்புழு தாக்குதலை தவிர்க்க 5 சத வேப்பங் கொட்டை கரைசலை பயன்படுத்தலாம். குருத்துப் பூச்சியை அழிக்க இனக்கவர்ச்சிப் பொறியை பயன்படுத்தலாம். நெல் சாகுபடியில் நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காமல் இருப்பதற்கு அடிக்கடி பயிர் மேல் விஷப்பூச்சி

மருந்துகளை அடிக்கக் கூடாது. விவசாயிகள் பயிர் பாதுகாப்பிற்கு சமுதாய இயக்கத்தை கையாளலாம். ஒரு பகுதியில் பயிர் பாதுகாப்பு செய்யும்போது அப்பகுதியில் இருக்கும் அனைத்து விவசாயிகளும் ஒரே சமயம் மருந்து அடிக்க வேண்டும். ஒருவர் மருந்து அடித்துவிட்டு மற்றவர் அடிக்காமல் விட்டுவிடக் கூடாது. சீனாவில் இரவு நேரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விளக்குப் பொறி வைக்கப்பட்டுஇருக்கும். இதில் பூச்சிகள் விழுந்து மாண்டுவிடும். அடுத்த படியாக தற்போது சம்பா பயிரை எலிகள் கடுமையாகத் தாக்கும். சமுதாய இயக்கத்தில் இவைகளை அழித்துவிடலாம். எலிகளின் இயற்கை விரோதிகளான பாம்பு, காட்டுப் பூனை, கீரி பறவை இவைகளை அழிக்கக்கூடாது. நெல்வயலில் பல இடங்களில் மூங்கில் குச்சிகளை நட்டு அதன் தலைபாகத்தில் பழைய துணிகளை கட்டி மெத்தைபோல் செய்தால் இரவில் ஆந்தைகள் இவைகள் மேல் அமர்ந்துகொண்டு அவ்வப்போது பறந்து எலிகளை பிடித்து தின்றுவிடும். விவசாயிகள் தினம் தவறாமல் பயிர்களை சுற்றிப்பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்த செயலே விவசாயிகளுக்கு கணிசமான அளவு உற்பத்தி அதிகரிப்பை ஏற்படுத்தும். -எஸ்.எஸ்.நாகராஜன்.

**நெற்பயிரில் நோய் கட்டுப்பாடு வேளாண் ஆய்வாளர் விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,00:30 IST

திருவூர் : பாக்டீரியா இலைக் கீற்று மற்றும் குலை நோய் போன்றவற்றின் பாதிப்பில் இருந்து, நெற்பயிரை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு திருவூரில் உள்ள, வேளாண் அறிவியல் நிலையத்தில் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள "பிபிடி 5204' மற்றும் "ஏடிடீ 39' போன்ற நெல் ரகங்களில் தற்போது பாக்டீரியா இலைக் கீற்று மற்றும் குலை நோய் அதிகளவில் தென்படுவது தெரிந்தது.இந்நோய் முதலில் கண்ணுக்கு புலப்படாத வகையில் தோன்றி பின்னர் வேகமாக இலைகள் முழுவதும் பரவி, மகசூலை வெகுவாக பாதித்துவிடும்.எனவே, இந்நோய்களில் இருந்து பயிர்களை பாதுகாக்கும் முறைகள் குறித்து திருவூர் நெல் ஆராய்ச்சி மற்றும் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ராமசுப்ரமணியன் ஆலோசனையின் படி, வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகளுக்கு விளக்கங்கள் அளித்து வருகின்றனர்.பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் சுமதி கூறுகையில், "இந்நோய் ஆரம்ப நிலையில் இலையின் சிறு நரம்புகளுக்கிடையே நீர் கசிவான கீற்றுகள் போல தோன்றும். பின்னர் இலை முழுவதும் செம்பழுப்பு நிறமாக மாறும். இக்கீற்றுகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இலைகளில் பரவி முழு இலைகளும் காய்ந்துவிடும்.

இதே போல குலைநோய் முதலில் இலைப் பகுதிகளில் கண் வடிவ புள்ளிகளாக தோன்றும். பின்னர் இவற்றின் ஓரங்கள் பழுப்பு நிறமாகவும், உள் பகுதி சாம்பல் நிறமாகவும், மையத்தில் வெள்ளைப் புள்ளியும் காணப்படும். நோய் தாக்குதல் அதிகமானால், இலைகள் பழுத்து கருகிவிடும். கதிர்களின் கணுக்கள் கருமையாகி கதிர் ஒடிந்து விடும். நெல் மணிகள் பதராகிவிடும்.இந்நோய்கள் காணப்படும் வயல்களில் இருந்து மற்ற வயல்களுக்கு தண்ணீரை பாய்ச்சக் கூடாது. அதே போல் நோய் தாக்கிய பயிரிலிருந்து விதைகளை சேகரிக்கக் கூடாது. நோய் இருப்பதை கண்டறிந்தவுடன் மண் பரிசோதனைப் படி தழைச்சத்து உரம் இட வேண்டும்.மேலும், பாக்டீரியா இலைக் கீற்றை கட்டுப்படுத்த சாண வடிநீர், கோசைட், ஸ்ட்ரெப்போ சைக்ளின், காப்பர் ஆக்ஸி குளோரைடு போன்றவற்றையும், குலை நோயை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளூரசன்ஸ், மாங்கோசெப் போன்றவற்றையும் உரிய விகிதத்தில் தெளிப்பான்களாக பயன்படுத்த வேண்டும்' என்றார்.

**ஆட்கள் பற்றாக்குறை சோளத்தட்டை அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,00:32 IST

பொங்கலூர் : சோளத்தட்டை அறுவடை செய்ய ஆட்கள் கிடைக் காததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பொங்கலூர் பகுதியில் கடந்த ஆவணி, புரட்டாசியில் மானாவாரி நிலங்களில் ஆயிரம் ஏக்கரில் சோளம், மக்காச்சோளம், கம்பு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இவைகள் தற் போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இவற்றை அறுவடை செய்ய கூலி ஆட்கள் கிடைக்காதது விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்திஉள்ளது. பொங்கலூர் பகுதி திருப்பூருக்கு மிக அருகில் உள்ளதால், பலரும் பனியன் நிறுவன தொழிலாளர் களாக மாறிவிட்டனர்; இளம் வயதினர் பலரும் நகரங்களுக்கு வேலைக்கு சென்று விடுகின்றனர். தற்போதைய விவசாயம் கிராமங்களில் உள்ள கூலி ஆட்களை நம்பியே உள்ளது. அரசின் நூறு நாள் வேலை திட்டத்தில், அவர்களும் அவ் வேலைக்கு சென்றுவிடுவதால், விவசாய வேலைக்கு கடும் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விவசாய வேலைக்கு வழக்கத்தைவிட கூடுதல் சம்பளம் கொடுத்தாலும் ஆட்கள் கிடைப்பது இல்லை. நூறு நாள் வேலை திட்டத்தில் வேலைக்கு செல்வோர், குறிப்பிட்ட நேரம் வேலை செய்தால் போதும்; ஆனால், விவசாய வேலைக்கு சென்றால், நாள் முழுவதும் வேலை செய்ய வேண்டும்; அறுவடை செய்ய வருவோரும் சம்பளம் பல மடங்கு கூடுதலாக கேட்கின்றனர். ஒரு ஏக்கர் சோளத் தட்டை அறுவடை செய்ய 5.000 ரூபாய் வரை கூலியாக கேட்பதால், கட்டுப்படியாகாது என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர். சில விவசாயிகள், சோளத்தட்டைகளை அறுவடை செய்யாமல் கால்நடைகளை மேயவிடுகின்றனர்; சிலர் டிராக்டரால் உழுது நிலத்திற்கு உரமாக்குகின்றனர். சோளத்தட்டைகள் அறுவடை செய்வதில் ஏற்பட்டுள்ள இப்பிரச்னையால், வரும் கோடை காலத்தில்

மாட்டுத்தீவனத்திற்கு தட்டுப் பாடு ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இது கறவை மாடு வளர்க்கும் விவசாயிகளை கவலையடைய வைத்துள்ளது. இப்பிரச்னைக்கு தீர்வு காண, சோளம் அறுவடை செய்யும் இயந்திரங்களை வேளாண் கூட்டுறவு வங்கிகளின் மூலம் குறைந்த வாடகைக்கு கொடுக்க அரசு முன்வர வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**தக்காளி பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,00:25 IST

பொங்கலூர் : பொங்கலூர் வட்டாரத்தில் தக்காளி பயிரிட விவசாயிகள் மத்தியில் ஆர்வம் அதிகரித்துள்ளது. பொங்கலூர் பகுதியில் காய்கறி விவசாயமே பிரதானமாக உள்ளது; தக்காளி வளர்ச்சிக்கு பனி காலம் உகந்ததாக இருப்பதால், தக்காளி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது தக் காளிக்கு நல்ல விலை கிடைத்து வருவதும் தக்காளி சாகுபடி அதிகரிக்க காரணமாகும். உகாயனூர், அலகுமலை, அவினாசிபாளையம், கண்டியன்கோ வில் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தக்காளி நடவு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்; மற்ற சில இடங்களில், தக்காளி பயிரிடுவதற்கான ஆயத்தப் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது. நாற்று விட்டு நடவு செய்ய ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க, பல விவசாயிகள் நாற்றுப் பண்ணைகளில், நாற்று வாங்கி நடவு செய் கின்றனர். இப்பகுதியில், ஏற்கனவே நடவு செய்யப் பட்டிருந்த தக்காளியில் பெரும் பகுதி மழையால் அழிந்து விட்டது; பத்து சதவிகித அளவுக்கே தக்காளி உற்பத்தியாகிறது. இதனால், தக்காளி விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. தற்போது, மார்க்கெட்டில் 5.5 கிலோ கொண்ட ஒரு கூடை 200 ரூபாய்க்கும், உழவர் சந்தையில், சில்லரை விலையில் 40 முதல் 45 ரூபாய்க்கும், கடையில் ஒரு கிலோ 50 ரூபாய்க்கும் தக்காளி விற்கப்படுகிறது.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு விரைவில் நிவாரணம் அளிக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,01:55 IST

கரூர்: "மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போர்கால அடிப்படையில் நிவாரணத்தொகை வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஐக்கிய விவசாய சங்க கிருஷ்ணராயபுரம் ஒன்றிய பேரவை பிரதிநிதிகள் கூட்டம் லாலாப்பேட்டையில் இரண்டு நாள் நடந்தது. மாவட்ட குழு உறுப்பினர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

மாநில செயலாளர் ராதாகிருஷ்ணன் பேசியதாவது: நதிகளை தேசியமயமாக்க வேண்டும். முதல் கட்டமாக தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும். நதி இணைப்பால் தரிசாக உள்ள 150 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறும். கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க வேண்டும். மானிய விலையில் விவசாயப்பொருள் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். கரூர் நொய்யல் ஆற்றில் திருப்பூர் சாயக்கழிவுநீர் கலப்பதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. சாயப்பட்டறை கழிவுநீரை சுத்தகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும். சுத்தகரிப்பு செய்யாத பட்டறைகளை மூட வேண்டும். புகளூர் டி.என்.பி.எல்., ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரும் முழுமையாக சுத்திகரிப்பு செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில், புயல்மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போர்கால அடிப்படையில் நிவாரணத்தொகை ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் உடனே வழங்க வேண்டும். வீடு, உடமை இழந்தவர்களுக்கும் நிவாரணத்தொகை வழங்க வேண்டும். அரசு வழங்கியுள்ள கான்கிரீட் வீடுகளுக்கு அறிவித்துள்ள தொகையை உயர்த்திட வேண்டும். இத்திட்டத்தை டவுன் பஞ்சாயத்து, நகராட்சிக்கும் விரிவுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வேளாண்மைத் துறை கலந்தாய்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,22:04 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டையில் வேளாண் விற்பனை துறை சார்பில் கலந்துரையாடல் நடந்தது. உளுந்தூர்பேட்டையில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணி கவரித் துறை சார்பில் கலந்துரை யாடல் நிகழ்ச்சி நடந்தது. வேளாண் அலு வலர் செந்தில் வரவேற் றார். துணை இயக்குனர் தனவேல் தலைமை தாங் கினார். நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ராமமூர்த்தி, இதயம் நல் லெண்ணெய் கொள்முதல் மேலாளர் தங்கராஜ், சுகுணா கோழிப்பண்ணை மேலா ளர் திருமூர்த்தி, நவீன அரிசி ஆலை உரி மையாளர் குமார், வேளாண்மை உதவி அலுலர்கள் தியாக ராஜன், முருகன் மற்றும் கெடிலம் உபவடி நில பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

**மொச்சை விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,21:54 IST

வத்திராயிருப்பு:மானாவாரி நிலங்களின் "பணப்பயிராக' விளங்கும் மொச்சைப் பயறு சீசன் மாவட்டம் முழுவதும் களைகட்ட துவங்கியுள்ளது. நல்ல மகசூல் இருந்தும், மழை தாமதத்தால், மகசூல் காலம் குறைந்து, ஓரிரு மாதங்களுக்குள் சீசன் முடியும் நிலை உள்ளதால், விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர்.ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, வ.புதுப்பட்டி, கான்சாபுரம் அத்திகோயில் ஆகிய பகுதிகள் நன்செய் நிலப்பகுதிகளிலும், சிவகாசி, விருதுநகர் பகுதியில் ஒரளவு நன்செய் கலந்த புன்செய் நிலங்களிலும் மொச்சைப் பயறு அதிகளவில் பயிரிடப்படுகிறது.
வழக்கமாக செப்டம்பரில் விதைப்பு துவங்கி, 60 நாள் வளர்ச்சிக்கு பின்னர், நவம்பர் முதல் காய் பறிக்கும் பணி நடக்கும். பிப்ரவரி வரை சீசன் களைகட்டும்.ஆனால் இந்தாண்டு, இரண்டு மாதம் தாமதமாக மழை பெய்ததால் விதைப்பு பணியும் தாமதமானது. இதனால் மகசூல் பெறவேண்டிய நான்கு மாத சீசன் இரு மாதங்களாக குறைந்தது.நெருக்கடி: பாதி சீசன் முடிந்திருக்க வேண்டிய நிலையில் தற்போதுதான் மகசூலே துவங்கியுள்ளது. இதற்கு தேவையான நல்ல பனி, இதமான சீதோஷ்ணம் நிலவி வருவதால் விளைச்சல் அமோகமாக உள்ளது. ஆனால், மகசூல் காலம் இன்னும் இரு மாதங்களே உள்ளது. பிப்ரவரிக்கு பிறகு, எள் சீசன் துவங்கிவிடும். அந்த நேரத்தில், எள் விதைக்கா விட்டால், பிறகு விதைக்க முடியாது. நிலத்தை தரிசாகவே போட வேண்டிய நிலை உள்ளது.

எனவே அடுத்த சாகுபடியை பாதிக்கும் என்பதால் மொச்சை மகசூலை விவசாயிகள், பிரப்ரவரி மாதத்திலேயே முடிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.தற்போது 60 கிலோ எடை கொண்ட மொச்சை மூடை 1400 முதல் 1700 ரூபாய் வரை விலை போகிறது. நல்ல விலையும், மகசூல் கிடைத்தும் அதை விவசாயிகளால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. அதற்குள் கிடைக்கும் மகசூலை வைத்து உழவு, நடவு, மருந்தடிப்பு செலவுகளையாவது மீட்டுவிட வேண்டும் என்ற தவிப்பில் உள்ளனர்.

### மார்ச்சுடன் நிறைவடையும் ரபி பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 92.70 லட்சம் டன்னை தாண்டும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 92.70 லட்சம்டன்னை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் ஆர்வம்

கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் ஏராளமான விவசாயிகள் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக கடுகு பயிரிடும் பரப்பளவு கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. டிசம்பர் 24–ந் தேதி நிலவரப்படி, 84.50 லட்சம் ஹெக்டேரில் கடுகு, நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டுள்ளன. இது, சென்ற ஆண்டு ரபி பருவத்தில் 82.40 லட்சம் ஹெக்டேராக இருந்தது.

ரபி பருவத்தில் பொதுவாக விதைப்பு பணிகள் அக்டோபர் மாதத்தில் தொடங்குகின்றன. அறுவடை மார்ச் மாதத்தில் தொடங்குகிறது. அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கடுகு விதைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ரபி பருவத்தில் பயிரிடப்படும் எண்ணெய் வித்துக்களுள் கடுகுதான் 70 சதவீத பங்கினைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் சமையல் எண்ணெய் பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை உற்பத்தியை விஞ்சி தேவைப்பாடு உள்ளதால் நம் நாடு இறக்குமதியை அதிகம் சார்ந்துள்ளது. இறக்குமதியாகும் சமையல் எண்ணெய் வகைகளுள் பாமாயிலின் பங்களிப்பு 80 சதவீதமாகும். நம் நாட்டில் பாமாயில் மற்றும் சோயா எண்ணெய்க்கு அடுத்தபடியாக கடுகு எண்ணெய்தான் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

எண்ணெய் பருவம்

நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) இந்தியாவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3.49 கோடி டன்னாக அதிகரிக்கும் என அண்மைக் கால மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன. இது, சென்ற பருவத்தின் உற்பத்தியைக் காட்டிலும் (3.17 கோடி டன்) 10 சதவீதம் அதிகமாக இருக்கும்.

இந்தியா, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது. நம் நாட்டில் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நம் நாட்டில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் மொத்த பரப்பளவில் 85 சதவீதம் நிலக்கடலை, கடுகு மற்றும் சோயாபீன் ஆகியவையே சாகுபடி செய்யப்படுகின்றன.

## பால் பவுடர் இறக்குமதி மீதான வரியை குறைக்க அரசு திட்டம்

தீப்ஷிகா சிகர்வார்

புதுடெல்லி

உள்நாட்டில் விலை உயர்வை தடுக்கும் வகையில் பால் பவுடர் இறக்குமதி மீதான வரியை குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு வரை இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்வது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

60 சதவீத வரி

தற்போது இறக்குமதி செய்யப்படும் பால் பவுடர் மீது 60 சதவீத வரி விதிக்கப்படுகிறது. சென்ற ஆண்டில், 30,000 டன் வரை 5 சதவீத சுங்க வரியுடன் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. டிசம்பர் 18–ந் தேதி நிலவரப்படி, பால் விலை, முந்தைய ஆண்டின் இதே மாதத்தை விட 18 சதவீதம் அதிகரித்து இருந்தது. கடந்த ஆறு மாதங்களில் குஜராதம் மாநில கூட்டுறவு பால் விற்பனை இணையம், தனது பால்

பொருள்களின் விலையை மூன்று முறை உயர்த்தியுள்ளது. பெருநகரங்களில் இந்நிறுவனத்தின் உயர்தர அமுல் கோல்டு பால், சில்லரை விற்பனையில், லிட்டர் ஒன்று ரூ.34 என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது. இது, 2009-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத நிலவரத்தை காட்டிலும் ரூ.8 அதிகமாகும்.

இந்தியா, சர்வதேச அளவில், பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. ஆண்டுதோறும் நம் நாட்டில் சுமார் 11 கோடி டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இது, பெரும்பாலும் உள்நாட்டு தேவையை ஈடு செய்வதற்கே போதுமானதாக உள்ளது. எனவே பால் மற்றும் பால் பொருள்கள் விலையில் அதிக ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது சகஜமாக உள்ளது.

மூன்று மாநிலங்கள்

இந்தியாவில் பால் உற்பத்தியில் குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன. அண்மையில் பெய்த கனமழையால் மாட்டுத் தீவனங்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மூன்று முக்கிய மாநிலங்களில் பால் கொள்முதல் குறைந்து போயுள்ளது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த பாலில் 50 சதவீதம் வீடுகளில் பயன்படுத்தப்பட்டு விடுகிறது. மீதமுள்ள 50 சதவீதம் பொது சந்தைக்கு வருகிறது.

## நெல்லியாம்பதியில், 21 நாட்கள் நடக்கிறது தேயிலை தொழிலாளர்களுக்காக இலவச மருத்துவ முகாம்

பாலக்காடு,ஜன.5–

பாலக்காடு மாவட்டத்தில் உள்ள நெல்லியாம்பதியில் பல்வேறு தேயிலை எஸ்டேட், தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். இவர்கள் அங்கேயே குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். இந்த தொழிலாளர்களின் நலனுக்காக கேரள சுகாதாரத்துறை, நெல்லியாம்பதி ஊராட்சி ஒன்றியம், நெல்லியாம்பதி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. இந்த முகாம் நேற்று தொடங்கியது. அடுத்த மாதம் 8–ந்தேதி வரை நடைபெறுகிறது. இன்று(5–ந்தேதி) ரோசெரி எஸ்டேட், நாளை( 6–ந்தேதி) பூந்துண்டு எஸ்டேட், 7–ந்தேதி பழகபாண்டி எஸ்டேட், 11–ந்தேதி கூனப்பாடம் அங்கன்வாடி, 12–ந்தேதி புருஷ்பாண்ட் எஸ்டேட், 19–ந்தேதி ராஜகாடு எஸ்டேட், 20–ந்தேதி சூரியபாறை எஸ்டேட், 21–ந்தேதி தூத்தன்பாறை எஸ்டேட், 22–ந்தேதி

காரப்பாறை எ, 23–ந்தே சீதாரகுன்னு பள்ளிக்கூடம், 24–ந்தேதி பாத்துக்குனி 2, 25–ந்தேதி கே.எப்.டி.சி. பகுதி பாலம், 26–ந்தேதி காரப்பாறை பி கைரளி எஸ்டேட், பிப்ரவரி 2–ந்தேதி போத்தன்பாறை மணல்ஆறு ஆஸ்பத்திரி, 3–ந்தேதி ஆனைமடை எஸ்டேட், 4–ந்தேதி சந்திரன்மலை எஸ்டேட், 5–ந்தேதி மீராபினோவர் அங்கன்வாடி, 6–ந்தேதி கொட்டான்காடு, 7–ந்தேதி எலன் ஸ்டோர் அங்காடி, 8–ந்தேதி லல்லி அங்கான்வாடி. முகாம் தினமும் மாலை 4 மணி முதல் நடைபெறுகிறது. இதில் தேயிலை தொழிலாளர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு இலவச சிகிச்சை பெறலாம்.

## தமிழ்நாட்டில் மழை பெய்யும் வாய்ப்பு வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜன.5–

சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:–

காற்றின் போக்கு சாதகமாக உள்ளதால் தமிழ்நாட்டில் தற்போது ஒரு சில இடங்களில் மழை பெய்துவருகிறது. கடந்த சில நாட்களாக வங்கக்கடலின் வடகிழக்கு பகுதியில் இருந்து ஈரமான காற்று வீசுகிறது. இதனால் தமிழ்நாடு, மற்றும் புதுசேரியில் கடலோர மாவட்டம் மற்றும் தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும் இன்று (புதன்கிழமை) மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையை பொறுத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

தலையங்கம்

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

5.1.2011 (புதன்கிழமை)

# சாகுபடி செய்வோம்

வெங்காயத்தை உரிக்கும்போதுதான் பொதுவாக தாய்க்குலத்தின் கண்களில் கண்ணீர் வரும். ஆனால் இப்போது வெங்காயம் மட்டுமல்ல, காய்கறிகள், கீரைவகைகள் என்று சமையல் செய்வதற்கு, இல்லத்தரசிகள் தேடும் எந்த பொருட்களின் விலையைக் கேட்டாலுமே, பெண்கள் மட்டுமல்லாமல், ஆண்கள் கண்களிலும் கண்ணீர் வருகிறது. வெங்காயமும், பச்சை மிளகாயும் பணக்காரர்கள் மட்டும் வாங்கிச் சாப்பிடும் உணவு பொருளல்ல. பாதாம், பிஸ்தா போல அல்ல இது. வறுமையின் கடைக்கோடியில் உள்ள பரம ஏழையும், அன்றாடம் கஞ்சி குடிக்கும்போது, கடிப்பதற்கு வெங்காயமும், பச்சை மிளகாயும்தான் வாங்குகிறான். ஆக ஏழை, பணக்காரன் என்று எல்லோரும் சாப்பிடும் உணவுக்கு அடிப்படைத் தேவை வெங்காயம், பச்சை மிளகாய், காய்கறிகள், கீரைவகைகள் ஆகும். இவை அனைத்தின் விலையும் விண்ணைத்தொடும் அளவுக்கு ராக்கெட் வேகத்தில் உயர்ந்துகொண்டே போகிறது. மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்தாலும், இன்னும் வேகமாக வேளாண்மைத் துறையும், தோட்டக்கலைத் துறையும் செயல்பட வேண்டும்.

வெங்காயத்தின் விலை இப்போதைக்கு குறையாதுபோலத் தெரிகிறது. தற்போது வெங்காய விளைச்சல் 12 சதவீதம் குறையும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சமீபத்தில் நாடு முழுவதும் பெய்த பெருமழைதான் இதற்கு காரணம். வெங்காய விலையைக் குறைக்க, வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்து, இறக்குமதி வரியை ரத்து செய்துள்ளது. இதுபோல, பருப்பு வகைகள் ஏற்றுமதிக்கும் தடை விதித்து, இறக்குமதிக்கான மானியத்தையும் நீட்டித்துள்ளது. விலைவாசியைக் குறைக்க வேண்டுமானால், இனி பெட்ரோல், டீசல் மீதான வரியைக் குறைக்க வேண்டும். இப்படியே செய்துகொண்டு போனால் அரசாங்கத்தின் வருவாய் குறைந்து, பற்றாக்குறை ஏற்படும். அந்த நேரத்தில் பணவீக்கத்தைக் குறைக்க வங்கிகள் கொடுக்கும் கடன்கள் மீதான வட்டியை ரிசர்வ் வங்கி உயர்த்த நேரிடும். அப்போது வீட்டுக்கடன் போன்ற கடன்களுக்கான மாதத் தவணை உயரக்கூடும். இது பொதுமக்களுக்கு மேலும் சொல்லொணாத்துயரத்தை அளிக்கும்.

இதற்கு பதிலாக, நமது வேளாண்மைத் துறையும், தோட்டக்கலைத் துறையும் அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, மின்னல் வேகத்தில் செயல்பட வேண்டும். வெங்காயம் ஒரு குறுகிய காலப் பயிர்தான். 90 நாட்களுக்குள் விளைந்துவிடும். காய்கறிகளும் குறுகிய காலப் பயிர்தான். கீரை வகைகள் சில நாட்களில் பறித்துவிடலாம். எனவே, மாநில வேளாண்மைத்துறையும், தோட்டக்கலைத் துறையும் தமிழ்நாட்டுக்குத் தேவை எவ்வளவு? என்பதைக் கணக்கிட்டு, நமது விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளையும் செய்து, உடனடியாக சாகுபடியைத் தொடங்கச் செய்ய வேண்டும். இந்த மாதத்தில் எல்லா வயல்களிலும் நெல் அறுவடை முடிந்துவிடும். அடுத்த நெல் பயிர் சாகுபடிக்கு முன்னால், அந்தந்த பகுதிகளில் என்ன பயிரை குறுகிய கால பயிராக பயிரிடலாம்? வெங்காயம் பயிரிடலாமா? காய்கறிகள் பயிரிடலாமா? என்பதை ஆராய்ந்து, உடனடி நடவடிக்கை எடுத்தால், அடுத்த 3 மாதங்களுக்குப் பிறகாவது விலைவாசி குறையும். அதற்குரிய வகையில் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்.

நீண்டகால நடவடிக்கையாக, தமிழ்நாட்டுக்கு ஒரு ஆண்டுக்கு என்னென்ன தானியங்கள், காய்கறிகள் எவ்வளவு தேவை? அதை எங்கெங்கு பயிரிட, எத்தகைய வாய்ப்புகள் இருக்கிறது என்று விரிவான ஆய்வுகளை வேளாண்மைத்துறை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்டி, அனைத்து பணிகளையும் தொடங்க வேண்டும். இந்தியாவின் மொத்த வெங்காய உற்பத்தியில் 50 சதவீதம் மராட்டியத்திலும், கர்நாடகத்திலும்தான் விளைகிறது. அந்த மாநில அரசுகளிடம் உற்பத்தியைக் கூட்டுவதற்கு மத்திய அரசு சொல்ல வேண்டும். மொத்தத்தில் இனியும் விலை உயர்வை தாங்குவதற்கு மக்களிடம் வலு இல்லை.

# 50 சதவீத மானிய விலையில் விவசாய இடுபொருட்கள்

கோத்தகிரி, ஜன.5–

கோத்தகிரி வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராம பகுதிகளிலும் ஊர் தலைவர், பஞ்சாயத்து தலைவர், உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் முன்னிலையில் தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய விபரம் மற்றும் 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள், 25 சதவீத மானிய விலையில் கைதெளிப்பான், ஆயில் என்ஜின், தேயிலை பறிக்கும் கருவி, வேளாண் கருவிகள் மற்றும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் கூட்டங்கள் கடந்த டிசம்பர் மாதம் 19–ந் தேதி முதல் தொடர்ந்து கிராமங்களில் நடத்தப்பட்டு வருகிறது. எனவே அனைத்து பகுதி விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பயன் பெற வேண்டும். இதுவரை விவசாயிகள் பலருக்கு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் எஸ்.மணி தெரிவித்துள்ளார்.



தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு முட்டைகோஸ் விதை பாக்கெட்டுகள் வழங்கப்பட்ட போது எடுத்த படம்.